# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை (திருத்தம்)

**2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் 2015, பெப்புருவரி மாதம் 10 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *333 ஆம் சட்டமூலம்* ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

2-PL 008770-475 (2015/02)

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2** : இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) புகையிலை மற்றும் மதுசாரத்தின் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது பின்வருவதற்கானதாகும் :-

(அ) இறக்குமதியாளர்களுக்கும் மற்றும் புகையிலை உற்பத்திப்பொருட்களை வழங்கும், விநியோகிக்கும் மற்றும் களஞ்சியப்படுத்தும் ஆட்களுக்கும் 34 ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தடையை நீடித்தல் ;

(ஆ) புகையிலை உற்பத்திப்பொருட்களைக் கொண்டுள்ள சிப்பங்கள், பொதிகள் மற்றும் அட்டைப்பெட்டிகளின்மீது வெளிக்காட்டி வைக்கப்படவேண்டிய உடல் நல எச்சரிக்கையின் பரிமாணத்தை ஒழுங்குவிதிகள்மூலம் குறித்துரைப்பதனை இயலச்செய்கின்ற ஏற்பாடுகளை அகற்றுதல் ;

(இ) 34 ஆம் பிரிவின்கீழ் தவறாளரொருவர்மீது விதிக்கப்பட்ட குற்றப்பணத்தை அதிகரித்தல்.

**வாசகம் 3** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தில் 34அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றதென்பதுடன், அப்பிரிவின் சட்டப்பயனானது, உடல் நல எச்சரிக்கைகள் எம்முறையில் வெளிக்காட்டி வைக்கப்படவேண்டுமோ அம்முறையை குறித்துரைப்பதற்கானதாகும்.

**வாசகம் 4** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது ''உடல் நல எச்சரிக்கைகள்'' என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணமொன்றை உட்புகுத்துவதற்கானதாகும்.

**வாசகம் 5** : இவ்வாசகம் 34அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு புகையிலை உற்பத்திப்பொருட்களின் ஏலவேயுள்ள கையிருப்புக்களின் உற்பத்தியாளருக்கும் மற்றும் இறக்குமதியாளர்களுக்கும் 2015, யூன் 1 ஆந் தேதி வரையான அவகாச காலப்பகுதியொன்றை வழங்குகின்றது.

**வாசகம் 6** : இவ்வாசகம் இச்சட்டத்துடன் ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு, முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 30 ஆம் பிரிவின்கீழ் திருத்துகின்ற சட்டம் நடைமுறைக்குவருகின்ற தேதிக்குமுன்னர் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் தொடர்ச்சியான நடைமுறைக்கு ஏற்பாடுசெய்கின்றது.

**புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை (திருத்தம்)**

ச.வ.ஓ–8/2015

## 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** (1) இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 2015, பெப்புருவரி 1 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தின் 34 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

*"உடல்நலம் பற்றிய எச்சரிக்கைகளின்றியும் மற்றும் தார் மற்றும் நிக்கோட்டீன் உள்ளீடு பற்றிய கூற்று அல்லது சுட்டுத் துண்டில்லாமலும், புகையிலை உற்பத்திப் பொருட்களின்*

34. (1) புகையிலை உற்பத்திப் பொருளொன்றின் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர் ஒருவர், அத்தகைய உற்பத்தியாளரினால் அல்லது இறக்குமதியாளரினால் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட புகையிலை உற்பத்திப்பொருளைக் கொண்டுள்ள ஒவ்வொரு சிப்பத்தினதும், பொதியினதும் அல்லது அட்டைப் பெட்டியினதும் முற்புற, பிற்புறப் பக்கங்கள் ஆகிய இரண்டினதும் மேற்பரப்பிடத்தில் துலாம்பரமாகவும் எளிதாக வாசிக்கத்தக்கவாறும் அச்சிடப்பட்டதாகவும், 34அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, விதந்துரைக்கப்படக்கூடியவாறான

2-PL 008770 -225(2013/03)

விற்பனை, இறக்குமதி முதலியன தடை செய்யப்படுதல்.

அத்தகைய உடல் நல எச்சரிக்கைகளுடன் அத்தகைய சிப்பத்தில், பொதியில் அல்லது அட்டைப்பெட்டியில் உள்ள ஒவ்வொரு புகையிலை உற்பத்திப்பொருளிலும் அடங்கியுள்ள தார் மற்றும் நிக்கோட்டீன் உள்ளீட்டைக் குறித்துரைக்கின்ற ஒரு சுட்டுத்துண்டை அல்லது கூற்றை வெளிக்காட்டி வைக்கச் செய்தல் வேண்டும்.

(2) ஆளொருவர், புகையிலை உற்பத்திப் பொருட்களைக் கொண்டுள்ள ஒரு சிப்பத்தை, பொதியை அல்லது அட்டைப்பெட்டியை, தார் மற்றும் நிக்கோட்டீன் உள்ளீட்டைக் குறித்துரைக்கின்ற சுட்டுத்துண்டொன்று அல்லது கூற்றொன்றும் உடல் நல எச்சரிக்கைகளுடன் சேர்த்து அத்தகைய ஒவ்வொரு உற்பத்திப்பொருள் மீதும் (1) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு, புகையிலை உற்பத்திப்பொருளைக் கொண்டுள்ள ஒவ்வொரு சிப்பத்தினதும், பொதியினதும் அல்லது அட்டைப்பெட்டியினதும் முற்புற மற்றும் பிற்புறப் பக்கங்கள் ஆகிய இரண்டினதும் மேற்பரப்பிடத்தில் துலாம்பரமாகவும் எளிதில் வாசிக்கத்தக்கவாறு அச்சிடப்பட்டதாகவும் வெளிக்காட்டி வைக்கப்பட்டாலொழிய, விற்பனை செய்தலோ, விற்பனைக்கு முனைதலோ, வழங்குதலோ, விநியோகித்தலோ அல்லது களஞ்சியப்படுத்துதலோ ஆகாது.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவரினால் சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஓராண்டை விஞ்சாததொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.”.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது முதன்மைச்சட்டவாக்கத்தின் 34அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 34அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

"*உடல் நல எச்சரிக்கைகளை எவ்வாறு வெளிக்காட்டி வைத்தல் வேண்டும் என்பது.*

34அ. (1) அவரால் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட்டுக்களினதும் ஏனைய புகையிலை உற்பத்திப் பொருட்களினதும் உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர் ஒருவர், சிகரெட்டுக்களை அல்லது ஏனைய புகையிலை உற்பத்திப் பொருட்களைக் கொண்டுள்ள ஒவ்வொரு சிப்பத்தினதும், பொதியினதும் அல்லது அட்டைப்பெட்டியினதும் முற்புற மற்றும் பிற்புறப் பக்கங்கள் ஆகிய இரண்டிலும் மேற்பரப்பிடத்தின் (பிரதான வெளிக்காட்டுகையிடம்) எண்பது சதவீத இடத்தை மேவி, 34 (1) ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட உடல் நல எச்சரிக்கை அச்சிடப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(2) மேற்கூறப்பட்ட உடல் நல எச்சரிக்கைகள், புகையிலை உற்பத்திப்பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் விளைவிக்கப்படும் உடல் நல ஆபத்துக்களையும் தீங்கான விளைவுகளையும் விதித்துரைக்கப்படக்கூடியவாறு கூட்டிக்காட்டுதல் வேண்டும்.

(3) சிப்பத்தின், பொதியின் அல்லது அட்டைப் பெட்டியின் முற்புற, பிற்புறப்பக்கங்களின் மீதான உடல் நல எச்சரிக்கைகள், ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுதல் வேண்டும்.

(4) உற்பத்தியாளரொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களிலான சிகரெட்டுகளையும் ஏனைய புகையிலை உற்பத்திப்பொருட்களையும் உற்பத்தி செய்யுமிடத்து, உற்பத்தியாளர் அத்தகைய

உற்பத்தியாளரினால் உற்பத்தி செய்யப்பட்ட வெவ்வேறான பலதரப்பட்ட இனங்கள் ஒரே நேரத்தில் ஒரே மாதிரியான உடல் நல எச்சரிக்கையைக் கொண்டிருக்காதிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(5) சிகரெட்டுக்களினதும் ஏனைய புகையிலை உற்பத்திப்பொருட்களினதும் சிப்பங்கள், பொதிகள் அல்லது அட்டைப்பெட்டிகள்மீது காட்சிப் படுத்தப்பட்ட உடல் நல எச்சரிக்கைகள் விதித்துரைக்கப்பட்ட உடல் நல எச்சரிக்கைகளின் ஒவ்வொரு பகுதிகளிலிருந்தும் உடல் நல எச்சரிக்கைகளின் விதித்துரைக்கப்பட்ட எல்லா வகைகளையும் மேவுவதற்கென ஒவ்வோர் ஆறு மாதங்களுக்கொரு தடவை மாற்றப்படுதல் வேண்டும்.

(6) சிகரெட்டுகளினதும் ஏனைய புகையிலை உற்பத்திப்பொருட்களினதும் உற்பத்தியாளர்களும் இறக்குமதியாளர்களும், அதிகாரசபையிடமிருந்து மட்டுமே பெற்றுக்கொள்ளப்படவேண்டியதும், விதித்துரைக்கப்பட்ட உடல் நல எச்சரிக்கைகளைக் கொண்டுள்ளதுமான நெருக்குறுத்த இறுவட்டைப் பயன்படுத்துமாறு தேவைப்படுத்தப் படுதல் வேண்டும்.”

முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவு, “தவிசாளர்” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது :-

“உடல் நல எச்சரிக்கைகள்” என்பது, படங்களை அல்லது உருவ விளக்கப்படங்களை மற்றும் செய்திகளை உள்ளடக்கும் ;”.

*நிலைபெயர்கால ஏற்பாடுகள்.*

**5**. பிரிவு 1(2)இன் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், புகையிலை உற்பத்திப்பொருட்களின் ஏலவேயுள்ள கையிருப்புக்களின் உற்பத்தியாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்கும் 34அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு 2015, யுன் 1 ஆந் தேதி வரையிலான அவகாசக் காலப்பகுதியொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

*பேணல்கள்.*

**6**. 2015, பெப்புருவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு, 2015, பெப்புருவரி 1ஆந் தேதியிலிருந்து தொடர்ந்து நடைமுறையிலிருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**7**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## அரசியலமைப்பின் 122 ஆம் உறுப்புரையின் கீழான புறக்குறிப்பு

மேலேயுள்ள சட்டமானது அமைச்சரவையின் கருத்துப்படி தேசிய நலன்கருதி அவசரமானதாகவுள்ளதென இத்தால் அத்தாட்சிப்படுத்தப்படுகின்றது.

**சுமித் அபேசிங்க**
அமைச்சரவைச் செயலளர்.

தேதி : 2015, சனவரி மாதம் 28 ஆந் தேதி

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*